## நமது பண்பாடு

### வாசித்து அறிக.



'பண்பு எனப்படுவது பாடு அறிந்து ஒழுகுதல்' என்பது கலித்தொகைச் செய்யுளாகும். மக்களின் சமூக வாழ்க்கையின் வளர்ச்சி கருதி, பாங்கு அறிந்து, பெருமை உணர்ந்து, பயன் தெரிந்து ஒழுகும் பண்பைத்தான் பண்பாடு என்று தமிழ்ச்சான்றோர் கூறுகின்றனர்.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்...' எனும் பாடலைப் பாடியுள்ளார் கணியன் பூங்குன்றனார். இப்பாடலில், எந்த ஊராயினும் அது எமது ஊரே! எந்த மனிதராயினும் அவர் எமது உறவினரே! என்று உலகப் பொது நோக்கைக் கொண்ட பண்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார். வாழ்க்கையில் உயர்ந்த குறிக்கோளை அடைவதையே பண்டைய தமிழர்கள் சிறந்த பண்பாட்டுக் கூறாகக் கருதினர். அறம், பொருள், இன்பம் என மூன்றையும் போற்றி வாழ்ந்தனர். அறத்திலிருந்து தவறினால் பழிவரும் என்ற பயம் கொண்டிருந்தனர்.

தமிழ் மன்னர்கள் புலவர்களைப் போற்றிப் பரிசளிக்கும் பண்பு பெரிதும் போற்றப்பட வேண்டியதாகும். சங்க காலத்தில் சேரமான் கடுங்கோ வாழியாதன் என்ற மன்னன் கபிலருக்கு நூறாயிரம் பொன்னும், பொற்காசுகளும் வழங்கியுள்ளார். மேலும், தமிழர்களின் அடிப்படைத் தேவைகளில் மிக முக்கியமானது உணவு. உணவு உண்ணும் முறை, ஆடை அணிதல், வழிபாடு போன்றவை தமிழர்களின் தனித் தன்மைகளைக் காட்டுகின்றன. உணவின் மூலமான அரிசி, சிறு தானியங்கள், இயற்கையாகப் பெறப்படும் காய்கறிகள் இவர்களின் முக்கிய உணவாகும். ஆள் பாதி ஆடை பாதி எனும் பழமொழிக்கு ஏற்பத் தமிழர்களின் உடைகளும் தனித்தன்மைதான். தமிழ்ப் பெண்கள் சேலை அணிவது, நெடுங்காலமாகப் பின்பற்றப்படும் பழக்கமாகும். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய நான்கு குணங்களும் இவர்களிடம் இயற்கையாகவே அமைந்திருக்கும்.





ஆண்கள் வேட்டி, சால்வை அணிந்து கொண்டு பண்பாட்டை நிலைப்படுத்தினர். தொழில்துறையில் பார்த்தோமானால், தமிழர்கள் இயல்பான நீரோட்டத்துடன் இணைந்து செயல்படுவார்கள். விவசாயம், மாடு வளர்த்தல், பயிரிடுதல், தானியங்களைச் சேகரித்தல் போன்றவை முக்கியத் தொழிலாகும்.

திருமணச் சடங்குகளில், தமிழர்களின் பண்பாடு மிகவும் போற்றுதலுக்குரியது. மஞ்சள் பூசுதல், குங்குமப் பொட்டு வைத்தல், தலைப்பாகை அணிதல், தாலி அணிவித்தல், மெட்டி அணிதல், மாலை மாற்றுதல் முதலான கூறுகள் நமது பண்பாட்டையும் பாரம்பரியத்தையும் நிலைக்கச் செய்கின்றன.

காலப்போக்கில் பண்பாடுகள் சில மாற்றங்களைக் கண்டாலும், அவற்றை நிலைக்கச் செய்வது அனைவரின் கடமையாகும்.

**அருஞ்சொற்கள்**

- தன்மை
- நாணம்

LIVEWORKSHEETS

வினாக்களுக்கு விடையளித்திடுக.

1. சான்றோர் கூறிய பண்பாடு எனப்படுவது யாது?
2. தமிழ் மன்னர்களின் சிறப்புகளைக் குறிப்பிடுக.
3. நமது அடிப்படைத் தேவைகளில் மிக முக்கியமானது என்ன? ஏன்?
4. பெண்களின் நான்கு குணங்களைப் பட்டியலிடுக.
5. தமிழர்களின் முக்கியத் தொழில்கள் யாவை?
6. நமது பண்பாடு ஏன் காக்கப்பட வேண்டும்?

நமது அடிப்படைத் தேவைகளில் மிக முக்கியமானது உணவு. ஏனெனில் உணவின் மூலமான அரிசி, சிறு தானியங்கள் இயற்கையாகப் பெறப்படும் காய்கறிகள் மிக முக்கிய உணவு என்பதனால்.

சான்றோர் கூறிய பண்பாடு எனப்படுவது மக்களின் சமூக வாழ்க்கையின் வளர்ச்சி கருதி, பாங்கு அறிந்து, பெருமை உணர்ந்து பயன் தெரிந்து ஒழுகும் பண்பாக்கு என்கின்றனர்.

தமிழ் மன்னர்களின் சிறப்புகள் வாழ்க்கையில் உயர்ந்த குறிக்கோளை அடைவது, அறம், பொருள், இன்பம் என மூன்றையும் போற்றி வாழ்ந்தனர். அறம் தவறினால் பழிவரும் என்ற பயமும் கொண்டவர்கள்

தமிழர்களின் முக்கியத் தொழில்கள் விவசாயம், மாடு வளர்த்தல், பயிரிடுதல், தானியங்கள் சேகரித்தல் போன்றவையாகும்.

நமது பண்பாடு காக்கப்பட வேண்டும் ஏனெனில் நமது கலைக் கலாச்சாரம் அழிவதைத் தவிர்க்கவும் , நமது அடுத்த தலைமுறையினருக்கு கற்றுக் கொடுக்க வேண்டியதற்கும் ஆகும்.

பெண்களின் நான்கு குணங்கள் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகியவையாகும்.

LIVEWORKSHEETS